(4) பெரியார் மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அ. பொன்னுசாமி, ச. பாலகிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு அதைக்கொண்டு வருவார்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெரியார் மாவட்டம், பெருந்துறை மற்றும் ஊத்துக்குளி ஒன்றியப் பகுதிகள் கடுமையான வறட்சியின் பிடியில் சிக்கி உள்ளதால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு நிலவரி, விவசாயக் கடன் மற்றும் மின் கட்டணம் செலுத்த இயலாமலுள்ள நிலை குறித்த' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதி பற்றிய வறட்சி நிலமை, அவற்றிற்காக செய்யவேண்டிய சலுகைகள் மற்றவைகளை பற்றிய விரிவான அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருவாய்த் துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆக, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அந்த அறிக்கை கிடைக்கப்பெற்று ஆராய்ந்து பிறகு தக்க நடவடிக்கைகளை எடுக்க இருக்கின்றார்கள். விரைவில் நடவடிக்கை எடுக்கும் படியாக அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதற்கான உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.

(5) சென்னை குடிசைப் பகுதிகள் சிலவற்றில் ஏற்பட்ட தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், மற்றும் கோ. வீரையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''1—4—1986 ஆம் தேதியன்று தாம்பரம் ரெங்கநாதபுரம் மற்றும் சென்னை மாம்பலம் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்துகளினால் பல குடிசை வீடுகள் எரிந்து நாசமாகி பல ஆயிரம் ரூபாய்கள் நஷ்டமேற்பட்டுள்ளதனால் அப்பகுதிவாழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.